## அத்தியாயம் 21

கோயிலுக்கு சென்று வந்த பின் அனைவரின் மனதிலும் ஒரு நிம்மதி நிலவியது. வருணின் குடும்பம் அவர்களின் வீட்டிற்கு செல்ல கீதா தன் தோழிகளுடன் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

வீட்டிற்கு வந்து உட்கார்ந்து கோயிலில் நடந்த பூஜைகளை பற்றி அபிராமி வேணுகோபாலனிடன் சிலாகித்து கொண்டிருந்தார்.

கீதா , ரியா, யோகா, ஸ்ரீதேவி நால்வரும் தோட்டத்தில் அமர்ந்து அரட்டையடித்து கொண்டிருந்தனர். அப்போது கீதா கார்த்திக் கோயிலில் நடந்து கொண்ட முறையையும் தன்னுடைய பதிலடியையும் பற்றி ஒரு வரி விடாமல் கூறி விட்டாள்.

" அவன் வருண் கிட்ட அந்த அடி வாங்கியும் திருந்தலையா கீத்து? " என்று கேட்டாள் ரியா.

" அவனுக்கு அந்த அடி ஒரைக்கலையோ என்னவோ?" என்று தோளை குலுக்கினாள் யோகா.

" பட் மாமியாரே! அவனுக்கு நீங்க குடுத்த ஸ்லாப்ஸ் செம! மாமனார் கூட சேந்து நீங்களும் கொஞ்ச கொஞ்சமா ஒரு ஃபைட்டராகிட்டு வர்ரிங்க. வாழ்த்துக்கள்" என்று கலாய்த்தாள் ஸ்ரீதேவி.

அவளை கேலியாக பார்த்தாள் கீதா. ரியா " இருந்தாலும் அவன் கிட்ட நீ கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துக்கோ கீத்து., எனக்கு அவனை பாத்தா ஏதோ தப்பா தோனுது" என்று சொல்ல யோகாவும் அதை ஆமோதித்தாள்.

பேசி கொண்டிருக்கும் போதே வருணின் கால் வர ரியா " அவன் வீட்டுக்கு போய் ஒன் ஹவர் தானடி ஆகுது., அதுக்குள்ள காலா?? ரொம்ப ஓவரா போறிங்கடி" என்று கலாய்க்க கீதா சிரித்து கொண்டே தனியாக வந்து வருணுடன் பேச ஆரம்பித்தாள்.

" என்னடா அதுக்குள்ள கால் பண்ணுற?? ரியா என்னை கிண்டல் பண்ணுறா உன்னால!"

" ஒன் ஹவர் நான் உன்னை பாக்காம இருந்திருக்கேன். அட்லீஸ்ட் போன்லயாச்சும் பேசலாம்னா இவ்ளோ நேரம் இந்த ஐசு வந்து மொக்கை போட்டு என்னை சாவடிச்சுட்டா"

" ஏய்! யாருடா அது ஐசு?? இன்னும் எத்தன பேரடா நான் சமாளிக்கனும்?"

" அடியே அவ என்னோட தூரத்து சொந்தம். அவங்க அம்மா எனக்கு அத்தை"

" டேரக்டா உன்னோட முறைப்பொண்ணுனு சொல்லுடா ஃப்ராடு"

" ஆமால்ல! இது மறந்து போச்சே! அப்போ இவ 26வது"

" அது என்னடா 26 வது??"

" என்னோட காண்டாக்ட் லிஸ்ட்ல இருக்கிற கேர்ள்ஸோட கவுண்ட்டிங்., கடைசியா கவுண்ட் பண்ணப்போ 25 இருந்துச்சு., அவளையும் சேத்தா 26 ஆச்சு"

" சார் அப்பிடியே செஞ்சுரி போட்டிங்கனா கொஞ்சம் கெத்தா இருக்கும்ல"

" சே சே ! அவ்ளோ பெரிய ஆசைலாம் இல்ல கீத்து"

" அப்போ அந்த 26 பேருல யாராச்சும் ஒருத்திய லவ் பண்ணு போ! இனிமே கீத்து மண்ணாங்கட்டினு கால் பண்ணு ! மவனே நீ செத்த"

" அந்த 26ல ஒன்னு தான் இப்போ நான் லவ் பண்ணுற நீ., எப்பிடி பாத்தாலும் கரெக்டா தான் இருக்கு"

" நீ மட்டும் எதிர்ல வாடா., அன்னிக்கு நீ செத்த"

" நீ ம்ம்னு மட்டும் சொல்லு., இப்போவே உன் வீட்டுக்கு வர்ரேன்"

" அவ்ளோ சீக்கிரம் சாகனும்னு ஆசையா??"

" ஐயோ! கீத்து என் செல்லக்குட்டி! நான் இவ்ளோ நேரம் உன் கிட்ட சும்மா வெளையாடுனேன் செல்லம்!., நீ கோச்சுகிட்டியா என்ன?"

" கொலைவெறில இருக்கேன்., போனை வச்சிடு"

" ஏய் ! என்னமா இது?? இந்த சுதந்திர நாட்டுல ஒரு பையன் அவனோட முறைப்பொண்ணு கூட பேசுனத சொன்னதுக்கு இவ்ளோ திட்டா?"

" அஹான்! அப்போ அந்த முறைப்பொண்ணு கூடவே எப்போவும் பேசிக்கோ"

" கீத்து! ஏய் சீரியசாவா சொல்லுற?? அப்போ நான் நெஜமாவே அவ கிட்ட பேசுனா உனக்கு எந்த ப்ராப்ளமும் இல்ல., அப்பிடி தானே" என்று சொல்லவும் கடுப்பான கீதா போனை வைத்துவிட்டாள்.

அதே கடுப்புடன் தோழிகளுடன் அமர்ந்தவளின் முகம் இருந்த போக்கை பார்த்ததும் ஏதோ நடந்திருக்கு என்று அவர்கள் புரிந்து கொண்டனர். வருண் மறுபடியும் கால் செய்ய கீதா கட் செய்தாள். போனை சுவிட்ஸ் ஆ.்ப் செய்து விட்டாள்.

அவன் ரியாவுக்கு கால் செய்ய கீதா அவளுடைய போனை வாங்கி சுவிட்ஸ் ஆ.்ப் செய்யவும் யோகாவுக்கு செய்தான்.

" இவனை என்ன தான்டி பண்ணுறது?? " என்று தலையில் அடித்து கொண்டாள் கீதா.

யோகா " லவ் பண்ணல்ல ! அனுபவி" என்று கலாய்த்தாள்.

அவள் எடுக்கவில்லை.

"வருண் உனக்கு சனியன் உன்னோட வாய்ல தான் இருக்கு" என்று நொந்தவனின் மனதில் ஒரு ஐடியா தோன்ற அதை செயல்படுத்த ஆரம்பித்தான்.

அடுத்த 15 நிமிடத்தில் அவன் கீதாவின் வீட்டில் இருந்தான். வீட்டு பெரியவர்களிடம் ஆச்சி அவளிடம் ஏதோ சொல்ல விரும்புவதாக கூற அவர்கள் அவனுடன் கீதாவை அனுப்பிவைத்தனர்.

வீட்டினுள் வந்த நொடியிலிருந்து தன்னை முறைத்து கொண்டிருந்த கீதாவை கண்டும் காணாத மாதிரி இருந்தவன் அவளை காரில் உட்கார சொல்லி ட்ரைவ் பண்ண ஆரம்பித்தான்.

நேராக குண்டாறு அணை இருக்கும் இடத்துக்கு காரை விட்டவனை பார்த்து "வருண் நீ எதுக்கு இப்போ மெட்டுக்கு (அந்த ஊரோட நேம் தான் அது)

வந்துருக்க ?"என்று கேட்க அவன் அமைதியாக வண்டியை ஒரு ஓடையின் பக்கம் நிறுத்திவிட்டு அவளுக்கு கதவை திறந்துவிட்டான்.

இறங்கியவள் அந்த இயற்கை அழகில் தன்னை மறந்தாள் ஒரு நிமிடம். அடுத்த கணமே வருணின் பேச்சு நியாபகம் வர முகம் கோபத்துக்கு மாறியது.

அவளுக்கு தெரியும் அவன் விளையாட்டுக்கு தான் அவ்வாறு கூறினான் என்று. ஆனால் விளையாட்டுக்கு கூட வருணின் பெயர் இன்னொரு பெண்ணுடன் சேர்வது அவளுக்கு பிடிக்கவில்லை. அதை அவனிடம் சொல்ல தெரியாமல் கோபத்துடன் நின்றாள்.

" கீத்து ! சாரிடா., நான் சும்மா தான் சொன்னேன். இங்க பாரு உன்ன தவிர வேற யாரையும் நான் யோசிச்சு கூட பாக்க மாட்டேன். இது உனக்கும் தெரியும். பட் என்னோட வாயால அத கேக்கனும்னு நெனக்கிறனு புரியுது. உன்ன தவிர வேற யாராலயும் என்னை புரிஞ்சிக்க முடியாது கீத்து. கோவத்த விட்டுடு ப்ளீஸ்" என்று காதை பிடித்து மன்னிப்பு கேட்டான்.

அவனது பாவனையில் நெகிழ்ந்தவள் அவனை அணைத்துகொண்டாள்.

" எனக்கு தெரியும் வருண். இருந்தாலும் இனிமே வெளையாட்டுக்கு கூட இப்பிடி சொல்லாத ப்ளீஸ்" என்று நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்து சொல்ல அவன் அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

" இனிமே இப்பிடி பேசுனா நீ என்னை என்ன வேணா பண்ணிக்கோ., பட் என் கிட்ட பேசாம மட்டும் இருக்காத கீத்து" என்று அவன் கூறவும் சரியென்று தலையாட்டினாள் கீதா.

" நீ ஜெர்மனில இருக்கிரப்போ கூட தான் நான் உன் கூட கொஞ்ச நாள் பேசல., அப்போ நீ என்ன பண்ண?"

" யூ நோ வாட்?? நீ சடன்னா பேசாம போனதும் எனக்கு அப்பிடியே தலையே வெடிக்குற மாதிரி ஆயிடுச்சு. ஒவ்வொரு நாளும் உன்னோட குட் மார்னிங்காக வெயிட் பண்ணுவேன். பட் நீ பண்ணதே கெடயாது. ஒரு கட்டத்துல எனக்கு உன் மேல ரொம்பவே கோவம் வந்துச்சு.இனிமே உன்ன பாத்தா கூட பேச கூடாதுனு டிசைட் பண்ணுனேன்" என்று சொல்லவும் கீதாவுக்கு கதை கேட்பது போல் இருந்தது.

" அதான் பவா மேரேஜுக்கு கூட உன்னை இன்வைட் பண்ணல! நான் நெனச்சேன் நீ என்னலாம் மறந்து போயிருப்பனு., பட் ஒவ்வொரு டைமும் அனு உன் கிட்ட பேசினத சொல்லுறப்போலாம் நீ என்ன மட்டும் தான் அவாய்ட் பண்றங்கிறது புரிஞ்சுது ! நானே உன் கிட்ட பேசிருக்கலாம். பட் என்னோட கோவம் என்னோட கண்ணை மறச்சிடுச்சு. பட் எப்போ உன்ன நேருக்கு நேரா பாத்தேனோ அப்போ முடிவு பண்ணேன், நீ இல்லாம ஒரு லைஃப் இருந்தா அந்த பிறவியே வேஸ்ட்னு. அதான் என்னோட கோவம், ஈகோ எல்லாத்தையும் தூக்கி போட்டுட்டு உன் கிட்ட செகண்ட் சான்ஸ் கேட்டேன்" என்று சொல்லவும் கீதாவுக்கு அவனுடைய காதலை நினைத்து மகிழ்ச்சியில் கண்ணீரே வந்து விட்டது.

அவளை நார்மலாக்குவதற்காக " ஓகே! ஆல்ரெடி நம்ம டேம் கிட்ட தான் இருக்கோம் கீத்து. சோ நீ உன்னோட அய்ஸ்ல் இருந்து இன்னொரு டேம ஓப்பன் பண்ண வேண்டாம் பேபி" என்று அவளை கிண்டல் செய்ய கீதா கண்ணை துடைத்தாள்.

" நீ இருக்க பாரு., உன்னால மட்டும் தான் என்னை அழ வைக்கவும் முடியும், சிரிக்க வைக்கவும் முடியும். போடா" என்று சொல்ல எழுந்த வருண் "நெஜமா போய்டுவேண்டி" என்று சொல்லி திரும்ப கீதா ஓடிச் சென்று அவனை பின்னாலிருந்து கட்டி கொண்டாள்.

" வாவ்! இதுக்காகவே டெய்லி உன்னை அழ வச்சு சமாதானப்படுத்தலாம் போலயே" என்று சொல்ல அவன் தலையில் செல்லமாக கொட்டினாள்.

" வீட்டுல நம்மள தேட போறாங்க., கௌம்புவோமா?" என்றாள் கீதா.

" கொஞ்ச நேரம் கீத்து., கொஞ்ச நேரம் இங்க இருந்துட்டு போவோமா?? ப்ளீஸ் ஃபைவ் மினிட்ஸ்" என்று அவன் கையை விரித்து ஐந்து விரல்களை காட்ட அவளும் அதே மாதிரி செய்து விட்டு " ஃபைவ் மினிட்ஸ் ஒன்லி" என்று சொல்லிவிட்டு அவனை அணைத்து கொண்டே அமர்ந்தாள்.

" கீத்து இன்னும் 3 டேஸ்ல நம்ம இங்கயிருந்து கௌம்பிருவோம். அப்றம் நான் இந்த ப்ளேஸ்லாம் ரொம்ப மிஸ் பண்ணுவேன்" என்று அவன் அங்கே ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரில் கல்லை எறிந்து கொண்டே வருத்தமாக கூறினான்.

" நானும் தான்டா. இங்க எல்லாம் ரொம்ப சின்ன வயசுல வந்தது வருண். இப்போ நெறய ப்ளேஸை எஸ்டேட்டா மாத்திட்டாங்க இல்ல" என்று கீதா கேட்க வருணும் அதை ஆமோதித்தான்.

இவ்வாறு அந்த இடத்தையும் அதன் அழகையும் ரசித்து கொண்டே நேரம் போவது தெரியாமல் ஐந்து நிமிடத்தையும் கடந்து உரையாடிய படியே இருந்தனர் இருவரும்...